U.S. Consulate General Chennai

Press Release

220, Anna Salai, Gemini Circle, Chennai - 600 006

Phone: +91-44-2857-4181 | Mail: ChennaiPDPress@State.Gov

AMERICAN CENTER Chennai

# சென்னை அமெரிக்க மையத்தில் மாணவர்களுக்கான இலவச கோடைகால அறிவியல், தொழில்நுட்ப, பொறியியல், கணித பயிலரங்குகள் தொடக்கம்

## *ஏப்ரல் 21 முதல் மே 30 வரை கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் மற்றும் நேரடி கற்றல் வாய்ப்புகள்*

**சென்னை, ஏப்ரல் 23, 2025**: சென்னை அமெரிக்க துணைத் தூதரகத்தில் உள்ள அமெரிக்க மையம், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) உள்ளிட்டவற்றில் ஆர்வத்தை வளர்க்கும் இலவச கோடைகால நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள பள்ளி மாணவர்களை அழைக்கிறது. ஏப்ரல் 21 அன்று தொடங்கிய பயிலரங்குகள் மே 30, 2025 வரை நடைபெறும்.

எட்டு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான இந்த நிகழ்வுகளில் சுவாரசியமான நேரடி கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும். திங்கள் முதல் வியாழன் வரை காலை 10:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை இவை நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணிக்கு திரைப்பங்கள் திரையிடப்படும். குறைவான இடங்களே உள்ளதல், பங்கேற்க விரும்புவர்கள் ChennaiAMCenter@State.Gov என்ற மின்னஞ்சல் முகவரியையோ அல்லது 73056-76662 என்ற வாட்சப் எண்ணையோ தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

மைக்ரோபிட்ஸ் மற்றும் ஸ்னாப் சர்க்யூட்ஸ், மெர்ஜ் கியூப் ஆக்மென்டட் ரியாலிட்டி அனுபவங்கள், மெய்நிகர் ரியாலிட்டி கண்ணாடிகள், 3டி பிரிண்டர் மற்றும் நாசா தொடர்புடைய லீகோ படைப்புகள் உள்ளிட்ட STEM கற்றல் கருவிகள் மூலம் மாணவர்கள் பயிற்சி பெறலாம். விறுவிறுப்பான வினாடி வினாவும் தினமும் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுபவர்களுக்கு 3டி நினைவுப் பொருட்கள் மற்றும் நாசா ஸ்டிக்கர்கள் உள்ளிட்ட பரிசுகளை வெல்லும் வாய்ப்பு கிடைக்கும்.

இந்த முன்னெடுப்பை பற்றி பேசிய சென்னை அமெரிக்க துணைத் தூதரக பொது உறவுநய அலுவலர் எரிக் அட்கின்ஸ், "STEM எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறைகளில் அமெரிக்காவின் சாதனைகளை கோடைகால அமர்வுகள் மூலம் அமெரிக்க மையம் கௌரவிக்கிறது. கற்பனை, கண்டுபிடிப்பு மற்றும் அர்த்தமுள்ள கற்றலுக்கான நுழைவாயிலாக இம்முயற்சி இருக்கும். அடுத்த தலைமுறை புதுமையாளர்களை வளர்க்க உதவும் இந்த இலவச நிகழ்ச்சியை வழங்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்," என்றார்.

அமெரிக்க துணைத் தூதரகத்திற்குள் அமைந்துள்ள சென்னை அமெரிக்க மையம், ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் வகையில் கற்றல், உரையாடல் மற்றும் ஊக்குவிப்பிற்கான மையமாக உள்ளது. 15,000 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட நூலகம் மற்றும் ஏராளமான மல்டிமீடியா மற்றும் டிஜிட்டல் வளங்களைக் கொண்ட இந்த மையம், ஒவ்வொரு நாளும் காலை 9:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை பொதுமக்களுக்கு திறந்திருக்கும்.

**புகைப்பட விளக்கம்**: அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் கவனம் செலுத்தும் சென்னை அமெரிக்க மையத்தின் இலவச கோடை அமர்வுகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் மாணவர்கள்.

###